**DEPARTMENTAL TESTS — JULY, 2024**

**SECOND CLASS LANGUAGE TEST IN MALAYALAM**

**[Translation from Tamil to Malayalam]**

[Time : 45 minutes

(Maximum marks : 100)

1. மலையாளத்தில் மொழி பெயர்க்கவும் :

கிராமங்களில் மிக முக்கியமான நிறுவனம் நூலகமாக இருக்க வேண்டும். அங்குள்ள முக்கியமான புத்தகங்கள் குழந்தைகளின் மன ஆரோக்கியத்திற்கு இடமளிக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். தாய், தந்தையின் மீதான பக்தி, தேசபக்தி, தன்னம்பிக்கை என்பவை ஒவ்வொரு நபருக்கும் இருக்க வேண்டிய தகுதிகளாகும். தெய்வபக்தி ஒருவரின் வாழ்க்கையை மற்றவர்களுக்கு முன்மாதிரியாக காட்டும் விதமாக மாற்றுகிறது. இவையெல்லாம் கிடைப்பது நூலக வாசிப்பின் வழியாகத்தான். ஒவ்வொரு குழந்தையும் தான் வாழ்க்கையில் என்ன ஆகவேண்டும் என்ற எண்ணம் உருவாக்குகின்ற இடம் நூலகமும் அங்கிருந்து கிடைக்கிற வாசிப்பின் மூலமாகும். கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களிடையில் தோற்றுவிக்க வேண்டிய மிக முக்கிய எண்ணம் புத்தக வாசிப்பு. அவன் எந்த புத்தகத்தை எடுத்து வாசிக்க வேண்டும் என்பதை கவனிப்பதும், நல்ல புத்தகத்தை எடுத்துக் கொடுப்பதும் பெற்றோர்களின் கடமையாகும்.

அறிவும், பொழுதுபோக்கும் இக்காலத்தில் கிடைப்பது புத்தகத்திலிருந்தாகும். வாசிப்பு ஒவ்வொரு நபரையும் தெளிவடையச் செய்கிறது. விவரசேகரிப்புக் கிடங்கு கேரளாவில் எல்லா ஆரம்ப நூலகங்களிலும் காணப்படுகிறது. குழந்தைகளுக்கு வாசிப்புத்திறன் மேன்படுத்தவும், புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வாசிக்கச் செய்யவும் நூலகங்களுக்கு சாத்தியமாகும். குழந்தைகள் நூலகத்தில் ஒன்றாகக்கூடி வாசிக்கும் பொழுது சமத்துவம் அங்கு உதயமாகின்றது. எல்லா எண்ணங்களையும் மறந்து ஒன்றாகக் கூடியிருக்கும் பொழுது கிடைக்கிற பரந்த எண்ணம் அசாத்தியமானது. அதற்கு வித்திட்டது நூலகங்களாகும். எல்லா துறைகளில் இருந்துள்ள அறிவும் ஒரு குடையின் கீழ் கிடைக்கிறது என்பது தான் நூலகத்தின் பெருமையை வெளிப்படுத்துகிறது. அறிவியல் துறைசார்ந்த அறிவும், இலக்கியம் சார்ந்த அறிவும் இங்கு கிடைக்கிறது. எந்த ஐயத்திற்கும் தீர்வும் கிடைக்கின்றது. நூலகத்திற்கு மனநிறைவுடன் செல்கின்றவரை வரவேற்க திறந்த மனதுடன் இருக்கும் ஆசாரியர்களாவார்கள் அங்கிருக்கும் ஒவ்வொரு நூற்களும்.

---